# நமது தின கனி
காலை நாளிதழ்
# NAMADHU DHINA KANI
Daily Morning

| Vol : 01 | Issue : 91 | 4 Pages | 03.11.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 91 | 4 பக்கங்கள் | 03.11.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## காசாவில் உள்ள ஐ.நா பள்ளி அருகே இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 27 பேர் உயிரிழப்பு



இஸ்ரேல், நவ.3

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்தின் காசாமுனை பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே போர் தீவிரம் அடைந்துள்ளது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்தபடி உள்ளது. இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் காசாவில் பலி எண்ணிக்கை 10 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. அங்கு ஏராளமான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாயின.

இதற்கிடையே காசாவில் உள்ள மிகப்பெரிய அகதிகள் முகாமான ஜபாலியா முகாம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. அகதிகள் முகாமில் உள்ள குடியிருப்புகள் மீது குண்டுகள் வீசப்பட்டன.

இதற்கிடையே, ஜபாலியா முகாம் மீது 2வது நாளான நேற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில் குடியிருப்பு கட்டிடங்கள் இடிந்து விழுந்தது. ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

ஜபாலியா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 195 பேர் பலியாகி உள்ளதாக காசாவின் அரசாங்க ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஜபாலியா அகதிகள் முகாமில் உள்ள ஐ.நா பள்ளிக்கு அருகே இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டதாக காசாவில் உள்ள சுகாதார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அஷ்ரஃப் அல்குத்ரா தெரிவித்தார்.

## கலாச்சாரத்தை காப்பாற்றிய ஒற்றுமை: சாதித்த பால் பண்ணையாளர்கள்



சுவிஸ் நாடு, நவ. 3

உலகளவில் புகழ் பெற்ற சுவிஸ் சீஸ் உட்பட பால் பொருட்கள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள இந்நாட்டில், அதிகளவில் பால் பண்ணைகளிலும், பசுமாடுகள்வளர்ப்பதிலும்பண்டையவழிமுறைகளே பின்பற்றப்படுகின்றன. பல கிராமங்களில் பால் பொருட்கள் தயாரிப்பில் பலதலைமுறைகளாகஈடுபட்டுவருகின்றனர். இதற்கானவழிமுறைகளை தங்கள் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக கருதுகின்றனர்.

பசுக்களை வயல்வெளிகளிலும், மலைகளிலும் மேய்வதற்கு அனுப்பி விட்டு அவற்றின் நடமாட்டத்தை சரியாக மேற்பார்வை செய்ய பசுக்களின் கழுத்தில் மணிகள் தொங்க விடுவது அவர்களின் பரம்பரை வழக்கம். பசுக்களின் நடமாட்டத்தின் போது மிக மென்மையான ஓசையை எழுப்பும் இந்த மணிகள், இந்நாட்டின் ஒரு அடையாளமாக கருதப்படுகிறது.

பனிமலை, பசுக்கள், வயல்வெளிகள், கிராமங்கள் என அனைத்து சுவிஸ்நாட்டின் அடையாளங்களும் கொண்டு சுமார் 4700 பேரை கொண்ட அந்நாட்டின் ஆர்வெஞ்சன் (Aarwangen) கிராமத்தில் ஒரு புது சிக்கல் எழுந்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் வசிப்பவர்களில் 25 சதவீதத்தினருக்கும் மேல் வெளிநாட்டினர். அந்த கிராமத்தில் வசிக்கும் அவர்களில் சிலர், பல பசுமாடுகளின் கழுத்தில் கட்டியுள்ள மணிகளிலிருந்து ஒன்றாக எழும்பும் ஓசை ஒரே நேரத்தில் ஒலிப்பதால் இரவு உறக்கத்தை கெடுப்பதாக கிராம சபையில் புகாரளித்தனர். இரவு வேளைகளில் மட்டும் மணிகளை கழட்டி வைக்க உத்தரவிடுமாறும் கோரியிருந்தனர்.

இதற்கு மறுப்பு தெரிவித்த கிராம மக்கள், "சுவிஸ் நாட்டின் தனித்தன்மை இந்த மென்மையான மணியோசை" என கூறி, கையெழுத்து இயக்கம் நடத்தி உத்தரவிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அனைவரின் கையொப்பமிட்ட எதிர்ப்பு கிராம சபையில் அளிக்கப்பட்டது.

பலமான எதிர்ப்பை கண்ட புகார் அளித்தவர்களில் ஒருவர் புகாரை திரும்ப பெற்றுக்கொண்டார்; மற்றொருவர் வேறு இடத்திற்கு இடம் மாறி விட்டார். உலகெங்கும் உள்ள பணக்காரர்களின் கருப்பு பணத்தை பதுக்க சுவிஸ்நாட்டில் உள்ள வங்கிகள்தான் முதல் புகலிடம் என நம்பப்படுகிறது. அந்த நாட்டில் ஒற்றுமையால் கலாச்சாரத்தை காப்பாற்ற முனைந்த சுவிஸ் பால் பண்ணையாளர்களின் மனஉறுதி சமூக வலைதளங்களில் பாராட்டப்பட்டு வருகிறது.

## கலாச்சாரத்தை காப்பாற்றிய ஒற்றுமை: சாதித்த பால் பண்ணையாளர்கள்



அமெரிக்கா, நவ.3

அமெரிக்காவில்உள்ளஉடாபகுதியை சேர்ந்த உட் என்பவர் அங்குள்ள ஒரு உணவகத்தில் துரித உணவு வகை மற்றும் 'மில்க்ஷேக்' ஆர்டர் செய்துள்ளார். அதன்படி சிறிது நேரத்தில் ஆர்டர் செய்த உணவு வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் ஆர்டர் செய்த உணவை சாப்பிட்ட உட், ஸ்ட்ரா மூலம் 'மில்க்ஷேக்'ஐ பருக தொடங்கினார். அப்போது அது 'மில்க்ஷேக்' இல்லை என்பதையும், தனக்கு வினியோகம் செய்யப்பட்டது ஒரு கோப்பை சிறுநீர் என்பதையும் கண்டுபிடித்து அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக தனக்கு உணவு வினியோகம் செய்த நிறுவன டிரைவரை அழைத்து விசாரித்தார்.

அப்போது அவர், தனது வாகனத்தில் இருந்த 2 கோப்பைகள் மாறியதை ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது அந்த டிரைவர் நீண்ட நேரம் வேலை செய்வதாகவும், போதிய இடைவேளை எடுக்க முடியாததால் தனது காரில் டிஸ்போசபிள் கோப்பைகளில் சிறுநீர் கழித்து தன்னை ஆசுவாசபடுத்தி கொண்டதாகவும் கூறினார்.

இதுதொடர்பாக உணவு வினியோக நிறுவனத்தை அணுகி, தான் ஆர்டர் செய்த உணவுக்குரிய பணத்தை திரும்ப பெறும் முயற்சியில் உட் ஈடுபட்டார். இதற்கிடையே சம்பந்தப்பட்ட டிரைவர் மீது உணவு வினியோக நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



சென்னை, நவ.3

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், 23 கோடியே 13 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி, நிர்வாக அலுவலகக் கட்டிடம் மற்றும் தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஆக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

9 சட்டமன்றத் தொகுதிகளில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் 7.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஆகிய விளையாட்டு உட் கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் மூன்று விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இதில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் கொளத்தூர் மற்றும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, வாணியம்பாடி, காங்கேயம், சோழவந்தான், ஸ்ரீவைகுண்டம், ஆலங்குடி, காரைக்குடி மற்றும் பத்மநாபபுரம் ஆகிய 9 சட்டமன்றத் தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட உள்ளது.

மேலும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கி 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் சென்னை, கோபாலபுரத்தில் 7 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குத்துச்சண்டை அகாடமி ஆகிய பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், உதயநிதி ஸ்டாலின், மு.பெ. சாமிநாதன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பழங்குடியின சார்ந்த பயனாளிகளிடமிருந்து தையல் பணிகள் செய்வதற்கு தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.3

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) வழியாக தொழில் முனைவோர்திட்டத்தின்கீழ் தையல் பயிற்சி பயின்றவர்கள் மற்றும் தையல் தொழிலுக்கு கடனுதவி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்;த பயனாளிகளிடமிருந்து தையல் பணிகள் செய்வதற்கு தகுதியான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் தாட்கோ இணையதளமான www.tahdco.com வழியே வரவேற்கப்படுகிறது என மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளா ர்கள். மேலும், விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்: 501 (ம) 503, 5வது தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர்641604. தொடர்புக்கு: அலைப்பேசி எண்: 94450 29552, தொலைபேசி எண்: 0421297112 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

# தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவர், ஆவின் பாலகம் அமைத்தல் மற்றும் விவசாய நிலம் வாங்குதல் போன்ற திட்டங்களுக்கு தாட்கோ வழியே மானியயத்துடன் கூடிய வங்கிக் கடன்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ. 3

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களுக்கு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திடும் வகையில் தொழில் முனைவோரின் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவர்,

ஆவின் பாலகம் அமைத்தல் மற்றும் விவசாய நிலம் வாங்குதல் போன்ற திட்டங்களுக்கு தாட்கோ வழியே மானியயத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராகவும் அத்துடன் கூடுதலாக இதரகட்டுமானபொருட்கள் மூலம் விற்பனை செய்து வருவாய் ஈட்டும் வகையில் ஆதிதிராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30மூ (விழுக்காடு) அல்லுத அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமும் பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50மூ (விழுக்காடு) அல்லது ரூ.3.75 இலட்சம் மானியமும் விடுவிக்கப்படும்.

50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உறைவிப்பான் (குசநநணநச)இ குளிர்விப்பான் (ஊழழடநச) போன்ற உபகரணங்கள் கொள்முதல் செய்து ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிடும் வகையில் ஆதிதிராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30மூ (விழுக்காடு) அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமும் பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50% (விழுக்காடு) அல்லது ரூ.3.75 இலட்சம் மானியமும் விடுவிக்கப்படும்.

200 நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்களுக்கு சமூக பொருளாதார நிலையில் மேம்பாட்டு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50மூ (விழுக்காடு) அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் வரை மானியம் விடுவிக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தாட்கோ இணையதள முகவரியில் விண்ணப்பம் செய்ய வேண்டும் (றறற.வயானஉழ.உழஅ) மேலும் விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அணுகி விவரம் பெற்று உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்கள்;.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்:501 (ம) 503,5 வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர் 641 604. தொடர்புக்கு: அலைபேசி எண்: 94450 29552 ,தொலைபேசிஎண்: 04212971112.

# அவினாசியில் நாளை மின்தடை ஏற்படும் பகுதிகள்

அவினாசி, நவ. 3

அவினாசி மின்வாரிய செயற்பொறியாளர் பரஞ்சோதி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியதாவது: அவினாசி துணை மின் நிலையத்தில் வருகிற 4ம் தேதி மின்பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது.

எனவே அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அவினாசி, வேலாயுதம் பாளையம், உப்பிலிபாளையம், செம்பியநல்லூர், சின்னேரி பாளையம், நம்பியம்பாளையம், வேட்டுவபாளையம், பழங்கரை, சீனிவாசபுரம், ராக்கியா பாளையம், காமராஜ் நகர், சூளை, மடத்துப்பாளையம், சேவூர் ரோடு, வ.உ.சி. காலனி, கிழக்கு, மேற்கு, வடக்கு ரத வீதிகள், அவினாசி கைகாட்டிப்புதூர், சக்தி நகர், குமரன் காலனி ஆகிய பகுதிகளில் மின்வினியோகம் இருக்காது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மங்கலம் ஊராட்சியில் கிராமசபை கூட்டம்



மங்கலம், நவ.3

திருப்பூர் மாவட்டம் மங்கலம் ஊராட்சிபுக்குளிபாளையம் பகுதியில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்த கிராம சபை கூட்டத்திற்கு மங்கலம் ஊராட்சி மன்றத்தலைவர் எஸ்.எம்.பி.மூர்த்தி தலைமை தாங்கினார்.

மேலும் இதில் மங்கலம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தாஹாநசீர், திருப்பூர் ஒன்றிய குழு உறுப்பினர் ஜானகி, மங்கலம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள், மற்றும் திருப்பூர் மாவட்ட உதவி திட்ட அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), மங்கலம் பகுதி கனரா வங்கி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் குப்பைகளை எரிக்கும் எந்திரம் திருப்பூர் மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. அதேபோல சுமார் 40லட்சம் மதிப்பிலான குப்பைகள் எரிக்கும் எந்திரத்தை தமிழக அரசு மங்கலம் ஊராட்சிக்கு வழங்க வேண்டும் , திருப்பூர் மாநகராட்சி எல்லையில் இருந்து மங்கலம் ஊராட்சி எல்லை வரை உள்ள நொய்யல் ஆற்றின் இரு கரைகளிலும் தார் சாலை அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மேலும் மங்கலம் ஊராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கியதை தொடர்ந்து கிராம சபை கூட்டத்தில் அனைத்து வீடுகளும் குடிநீர் வசதி பெற்ற ஊராட்சி என பொதுமக்களிடம் அறிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் மங்கலம் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது.

# திருப்பூரில் கொட்டி தீர்த்த கனமழை



திருப்பூர், நவ.3

தமிழகத்தில் ஒரு சில மாவட்டங்களில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இதனிடையே திருப்பூர் மாவட்டத்தில் நேற்று காலை முதல் மதியம் வரை வெயில் வெளுத்து வாங்கியது. மாலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு வந்த நிலையில் இரவு திடீரென பலத்த மழை பெய்தது.

திருப்பூர் ,அவிநாசி, மங்கலம் ,பல்லடம் ,உடுமலை என மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் இரவு ஒரு மணி நேரத்திற்கு மேலாக மழை வெளுத்து வாங்கியது. ஒரு சில இடங்களில் மழையானது தொடர்ச்சியாக பெய்து வருகிறது .இதனால் வெப்பம் தணிந்து. குளிர்ச்சியான சூழல் நிலவி வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் நேற்று இரவு திருப்பூர் வடக்கு பகுதியில் 50.50 மில்லி மீட்டர், தெற்கு பகுதியில் 7.40 மில்லி மீட்டர், ஊத்துக்குளி 20.40 மில்லி மீட்டர், மடத்துக்குளம் 10 மில்லி மீட்டர், மூலனூர் 37 மில்லி மீட்டர், தாராபுரம் 16 மில்லி மீட்டர் என மொத்தம் 248.70 மில்லி மீட்டர் மழை பதிவாகி யுள்ளது.




திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவங்குமார் ஜி கிரியப்பனவர் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் குழந்தைகள் நல காப்பகத்தில் உள்ள மாணாக்கர்களுக்கு விழிப்புணர்வு சுற்றுலா நிகழ்ச்சியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.






தமிழக முதல்வர் ஸ்டாலின் திருப்பூர் வாவட்டம் சிவன்மலை ஊராட்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் கட்டப்படும் முதல்வர் சிறு விளையாட்டு அரங்கத்திற்கு சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத்தலைவர் பத்மநாபன் காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் மகேஷ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

# தீபாவளி காற்று மாசு திருப்பூரில் 5ந்தேதி முதல் ஆய்வு தொடக்கம்

திருப்பூர்: நவ.3

தீபாவளி கொண்டாட்டத்தில் விதவிதமான பட்டாசு ரகங்களை வாங்கி வெடிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. கண்களுக்கும், மனதுக்கும் மகிழ்ச்சி தந்தாலும்கூட அதிக அளவில் பட்டாசு ரகங்கள் வெடிப்பது சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்துகிறது.

மாசுகட்டுப்பாடு வாரியம் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையின் போது, அனைத்து மாவட்டங்களிலும் காற்று மாசு குறித்து ஆய்வு நடத்தி அறிக்கை தயாரிக்கிறது.

வரும் 12ந் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

பண்டிகைக்கு இன்னும் 9 நாட்களே உள்ள நிலையில், பின்னலாடை நகரான திருப்பூரில் வருகிற 5ந் தேதி முதல் காற்றுமாசு ஆய்வு துவங்கப்பட உள்ளது.



மாசுகட்டுப்பாடு வாரிய ஆய்வக முதன்மை விஞ்ஞானி கல்யாணி தலைமையிலான குழுவினர் இந்த ஆய்வு மேற்கொள்கின்றனர்.

வருகிற 5ந் தேதி காலை, 6 மணி முதல் முதல் 19 தேதி காலை 6 மணி வரை, தொடர்ந்து 15 நாட்கள் காற்று மாசு ஆய்வு செய்யப்பட உள்ளது. 5 ந் தேதி முதல் 11ந் தேதி வரை, பண்டிகைக்கு முந்தைய காற்று மாசு,12ந் தேதி முதல் பண்டிகை கால காற்று மாசு ஆய்வு செய்யப்படுகிறது.

காற்று மாசு கணக்கிடுவதற்காக திருப்பூர் குமரன் வணிக வளாகம் மற்றும் ராயபுரத்தில் உள்ள மாசு கட்டுப்பாடு வாரிய பறக்கும்படை அலுவலகத்தில், ஆம்பியன் ஏர் குவாலிட்டி மெஷர்மெண்ட் கருவி வைக்கப்படுகிறது.

காற்றில் கலந்துள்ள 10 மைக்ரானுக்கு கீழ் உள்ள நுண் துகள்கள் (பி.எம்.,10), 2.5 மைக்ரானுக்கு கீழ் உள்ள நுண் துகள்கள் (பி.எம்.,2.5), சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் டை அக்சைடு அளவுகள் கணக்கிடப்பட உள்ளது.

அதேபோல் வருகிற 6ந் தேதி பண்டிகைக்கு முந்தைய ஒலி மாசு, 12ந் பண்டிகை நாள் ஒலிமாசு அளவிடப்படுகிறது.

இந்த ஆய்வு வாயிலாக திருப்பூரில் காற்று மாசு ஏற்படுத்தும் பட்டாசு ரகங்கள் அதிகம் வெடிக்கப்பட்டுள்ளனவா, முந்தைய ஆண்டைவிட இந்தாண்டு காற்று மாசு கட்டுப்பாட்டில் உள்ளதா ,எல்லை மீறியுள்ளதா போன்ற விவரங்கள் தெரியவரும்.

# ஜம்புக்கல் மலை விவகாரம்: புகார் அளித்தவர்களிடம் உடுமலை ஆர்.டி.ஓ. விசாரணை

உடுமலை, நவ. 3

உடுமலை அடுத்த ஆண்டியகவுண்டனூர் கிராமத்திற்குட்பட்ட பகுதியில் ஜம்புக்கல் மலை உள்ளது. இந்த மலைப்பகுதியில் ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில் கடந்த சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு நிலம் வழங்கப்பட்டது.

பின்னர் நிலத்தை பெற்றவர்கள் சந்தித்த பல்வேறு இடர்பாடுகளால் அதில் திறம்பட சாகுபடி பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என்று கூறப்படுகிறது. இந்த சூழலில் அந்த நிலத்தை கடந்த சில வருடங்களுக்கு முன்பு தனியார் ஒருவர் விற்பனைக்கு வாங்கி உள்ளார். அதன் பின்பு அவர் அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதாக தெரிகிறது.



இந்த சூழலில் மலைப்பகுதியில் நிலத்தை கிரையம் பெற்ற தனியார் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறி உடுமலை ஆர்.டி.ஓ.விடம் பொதுமக்கள் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது. அதன் பேரில் 2 தரப்பினரையும் உரிய ஆவணங்களுடன் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு ஆர்.டி.ஓ. அலுவலகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து ஆண்டிய கவுண்டனூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் உடுமலை ஆர்.டி.ஓ. ஜஸ்வந்த் கண்ணன் புகார் அளித்தவர்களிடம் விசாரணை நடத்தினார். இதில் ஒரு சிலர் விசாரணைக்கு ஆஜராக வில்லை.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில் "ஜம்புக்கல் மலை விவகாரம் தொடர்பாக நீண்ட நாட்களாக விவாதம் நடைபெற்று வருகிறது.

அதன் பேரில் விசாரணை மேற்கொண்டது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதில் உண்மை நிலையை கண்டறிந்து பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டியதும் அவசியமாக உள்ளது" என்றனர். இந்த நிகழ்வின் போது உடுமலை தாசில்தார் சுந்தரம், மண்டல துணை தாசில்தார் சந்திரசேகர் உள்ளிட்ட வருவாய்த்துறையினர், பொது மக்கள் உடனிருந்தனர்.

# தி ஜங்கிள் கேங் திரைப்படம் பள்ளிகளில் திரையிட உத்தரவு




திருப்பூர்: நவ.3

கானுயிர்களின் வாழ்வியலைமையமாககொண்டு தயாரிக்கப்பட்ட தமிழ் திரைப்படமான, தி ஜங்கிள் கேங் திரைப்படத்தை பள்ளிகளில் திரையிடுமாறு, தலைமையாசிரியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசுப்பள்ளி மாணவர்கள் மத்தியில் ஒளிந்திருக்கும், கலைத்திறனை வெளிக்கொணரும் வகையில் சர்வதேச, தேசிய விருதுகள் பெற்ற சிறந்த சிறார் திரைப்படங்கள், மாதந்தோறும் திரையிடப்படுகின்றன. இம்மாதத்திற்கான திரைப்படமாக 2012ல் தமிழில் வெளியான, தி ஜங்கிள் கேங் திரைப்படம் தேர்வு செய்யப்பட்டு, பதிவிறக்குவதற்கான லிங்க் பள்ளி எமிஸ் இணையதளத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

இப்படத்தில் அனிமேஷன் கதாபாத்திரங்களான கருப்பு மான், வாத்து, தேவாங்கு ஆகியவை தங்கள் பயணத்தை வடகிழக்கு இந்தியாவில் இருந்து துவங்கி, மத்திய பகுதி வழியாக தென்னிந்தியாவை வந்தடைகின்றன.கதையில் காண்டாமிருகம், புலி, யானை, கரடி போன்ற விலங்குகளின் தகவல்கள் குழந்தைகளுக்கு புரியும் வகையில் சொல்லப்பட்டுள்ளன.

திரைப்படம் வழியே, விலங்குகள், தாவரங்கள், சூழலை பாதுகாப்பதன் அவசியம், பங்களிப்பு முறை குறித்து, குழந்தைகளுக்கு புரியும் வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு விருதுகளை குவித்த ப்படத்தை பள்ளிகளில் திரையிடுவதோடு மாணவர்களை குழுக்களாக பிரித்து, திரைப்படம் ஏற்படுத்திய தாக்கம், கதாபாத்திரங்கள் குறித்து விவாதித்து அறிக்கை வடிவில் எமிஸ் இணையதளத்தில் பதிவேற்ற ஆசிரியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்டோபர் மாதத்தில் காலாண்டு தேர்வு, விடுமுறை அறிவிக்கப்பட்டு குறைந்த நாட்களே பள்ளி இயங்கியதால், நவம்பர் முதல் வாரத்திற்குள் இப்படத்தை மாணவர்களுக்கு திரையிட்டு காட்டுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூரில் பஸ் நிலையத்தில் பெண் சரமாரி குத்திக்கொலை: கள்ளக்காதலன் வெறிச்செயல்

திருப்பூர், நவ.3

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கீரனூர் பகுதியை சேர்ந்தவர் பவளக்கொடி என்கிற சாந்தி (37). இவருக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். இந்தநிலையில் சாந்திக்கும் அந்த பகுதியை சேர்ந்த கணேசன் (43) என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் அவர்களுக்குள் கள்ளக்காதலாக மாறியது. இதையறிந்த 2 பேரின் வீட்டினர் கண்டித்தனர். இதையடுத்து அவர்கள் வீட்டை விட்டு வெளியேறி திருப்பூர் வந்தனர். திருப்பூர் கோவில் வழியில் உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துகணவன்மனைவி போல் வாழ்ந்து வந்தனர். கணேசன் திருப்பூரில் உள்ள பனியன் நிறுவனத்தில் டிரைவராக பணியாற்றி வந்தார். இதனால் அவர் அடிக்கடி வெளியூர் சென்று விடுவார்.

இந்தநிலையில் சாந்தி அடிக்கடி யாருடனோ செல்போனில் பேசி வந்தார். வெளியூர் செல்லும் கணேசன் போன் பண்ணும் போது சாந்தி எடுக்காமல் இருந்ததுடன், வேறு யாருடனோ பேசி கொண்டு இருந்துள்ளார். இதனால் சாந்தி மீது கணேசனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதன் காரணமாக அவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. மேலும் கணேசன் வேலைக்கு சென்றதும் சாந்தி வீட்டில் இருந்து வெளியே சென்று வந்துள்ளார்.

இந்தநிலையில் சாந்தி வெளியில் எங்கு செல்கிறார் என்பதை கண்டறிய கணேசன்திட்டமிட்டார். அதன்படி நேற்றிரவு வேலைக்கு செல்வதாக கூறிய கணேசன், சாந்தியை நோட்டமிட அங்கு ஒரு இடத்தில் மறைந்து கொண்டார்.

கணேசன் வேலைக்கு சென்றதாக நினைத்து கொண்ட சாந்தி, வீட்டில் இருந்து வெளியே புறப்பட்டு சென்றார். இதையடுத்து அவரை பின்தொடர்ந்து கணேசன் சென்றார். அப்போது சாந்தி திருப்பூர் மத்திய பஸ் நிலையத்திற்கு சென்றதுடன், அங்கு வேறு ஒரு வாலிபருடன் பேசி கொண்டிருந்தார். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த கணேசன், சாந்தியிடம் நான் இருக்கும் போது, எப்படி வேறு ஒருவருடன் பழகலாம் என்று தட்டிக்கேட்டார். இதில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. அப்போது ஆத்திரமடைந்த கணேசன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் சாந்தியை சரமாரி குத்தினார். இதில் சாந்தியின் தலை, கை, உடல்களில் கத்திக்குத்து விழுந்தது. ரத்த வெள்ளத்தில் சரிந்த அவர் உயிருக்கு போராடினார். உடனே அங்கு நின்ற பயணிகள் திருப்பூர் தெற்கு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் உயிருக்கு போராடிய சாந்தியை மீட்டு சிகிச்சைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி சாந்தி இறந்தார். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கணேசனை கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கள்ளக்காதல் பிரச்சனையில் பெண்ணை பனியன் நிறுவன டிரைவர் கத்தியால் குத்திக்கொன்ற சம்பவம் திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மின்வாரிய போலி எஸ்.எம்.எஸ்.கள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் பொதுமக்கள் வலியுறுத்தல்

திருப்பூர், நவ.3

மின் கட்டணம் செலுத்துவது, மின் இணைப்புக்கு விண்ணப்பிப்பது என மின்வாரியம் தொடர்புடைய அனைத்து பணிகளும் ஆன்லைன் மயமாகி விட்ட நிலையில், மின் நுகர்வோரை ஏமாற்றி பணம் பறிக்கும் நோக்கில் சில போலி எஸ்.எம்.எஸ்.,களும் உலா வருகின்றன. அதன்படி, உங்கள் மின் கட்டணம் செலுத்தப்படாமல் உள்ளது. உடனடியாக மின் கட்டணம் செலுத்துங்கள். தவறினால், உங்கள் மின் இணைப்பு துண்டிக்கப்படும்.உடனடியாக இந்த எண்ணுக்கு அழையுங்கள் என்ற வாசகம் தாங்கி, ஒரு மொபைல் எண்ணுடன் கூடிய எஸ்.எம்.எஸ்., வந்த வண்ணம் உள்ளது. இது மின் நுகர்வோர் மத்தியில் குழப்பத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கும் மேலாக இன்னும் சில எஸ்.எம்.எஸ்.,களில், ஒரு மொபைல் எண்ணை குறிப்பிட்டு, மின் கட்டண பாக்கியை அந்த எண்ணுக்கு செலுத்த வேண்டும் எனவும், எஸ்.எம்.எஸ்., வருகிறது. இது குறித்து திருப்பூர் மின்வாரிய அதிகாரிகள் கூறுகையில், டிஜிட்டல் பண பரிவர்த்தனை வாயிலாக, பண மோசடி அதிக அளவில் நடந்து வருகிறது. அது போன்ற மோசடி தான், இது போன்ற எஸ்.எம்.எஸ்.,கள். இதுபோன்ற தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம். மின்கட்டணம் செலுத்தியதற்கான தகவல், செலுத்த வேண்டிய தகவல் குறித்த விவரங்கள் மட்டுமே மின் வாரியத்தி னர் சார்பில் எஸ்.எம்.எஸ்., வாயிலாக அனுப்பப்படுகிறது என்றனர். நுகர்வோர் சிலர்கூறுகை யில்,போலி எஸ்.எம்.எஸ்.,களை அடையாளம் காண்பது, கடினமான காரியமாக உள்ளது. எஸ்.எம்.எஸ்., அதில் வரும் லிங்க் ஆகியவற்றை தொடும் போதே, நமது வங்கிக்கணக்கு, இமெயில் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்கள், மர்ம நபர்களால் சேகரிக்கப்பட்டு, பண மோசடி நடக்கிறது என போலீசார் எச்சரிக்கின்றனர். எனவே போலி எஸ்.எம்.எஸ்.,களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# மாநகராட்சி–நகராட்சிகளில் தூய்மைப்பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி வழங்க வேண்டும்: நகராட்சி நிர்வாக இயக்குனரகம் அறிவிப்பு

திருப்பூர், நவ.3

நகர்ப்புற உள்ளாட்சிகளில், தனியார் நிறுவனத்தினர் சார்பில் மேற்கொள்ளப்படும் தூய்மைப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து திருப்பூர்மாவட்ட ஊரக உள்ளாட்சித்துறை ஊழியர் (சி.ஐ.டி.யு.,) சங்கத்தின் சார்பில், அதன் மாவட்ட செயலாளர் ரங்கராஜ், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்தார்.

அதனடிப்படையில், நகராட்சிகளின்நிர்வாக இயக்குனர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை விவரம் வருமாறு:

மாநகராட்சி, நகராட்சிகளில் தனியார் வாயிலாக மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகளில், சில நகர்ப்புற உள்ளாட்சிகளில் சட்ட விதிப்படி பணி மேற்கொள்ளப்படுவதில்லை. ஒப்பந்ததாரரிடம் பணிபுரியும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்கீழ்நிர்ணயிக்கப்பட்ட கூலி பிரதிமாதம் வழங்கப்படுவதில்லை என்ற புகார் வந்த வண்ணம் உள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள், தினமும் வீடு, வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் குப்பைகளை தரம் பிரித்து வாங்க வேண்டும். பஸ் நிலையம், சந்தை, சாலை மற்றும் வீதிகளில் தேங்கும் குப்பை, கழிவுநீர், கால்வாயில் தேங்கும் கசடு, மண் உள்ளிட்டவற்றை சேகரித்து மக்கும், மக்காத கழிவுகளை தனியாக பிரித்து நுண் உர மைய கூடம், உலர்க்கழிவு சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்க வேண்டும். எஞ்சிய குப்பைகளை அதற்குரிய இடங்களில் கொட்ட வேண்டும்.

தினமும் சேகரிக்கப்படும் குப்பையில் மக்கும் குப்பை, மக்காத மறு சுழற்சிக்கு பயன்படுத்தக்கூடிய உலர் கழிவுகள், மக்காத எதற்கும் பயன்படாத பிற உலர்கழிவுகள், வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் டயர், நாப்கின், பயன்படுத்தப்படாத மருந்து, மருந்து அட்டைகள் உள்ளிட்ட அபாயகரமான கழிவுகளை தனித்தனியே சேகரிக்க வேண்டும். தினசரி சேகரிக்கப்படும் ஒட்டு மொத்ததிடக்கழிவிற்கான அளவை உரிய பதிவேட்டில், தினமும் பதிவு செய்ய வேண்டும்.

நகராட்சி, மாநகராட்சி நிர்வாகத்தினர் ஒப்பந்த அடிப்படையில் ஒவ்வொரு பணிக்கும் செயல் திறன் கணக்கிட்டு அதன் படி தொகை கணக்கிட்டு நகராட்சி,

மாநகராட்சி நிர்வாகத்தினர் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டும். வீடு, கடை, வணிக வளாகம், சந்தைகளின் எண்ணிக்கை, அங்கு சேகரிக்கும் திடக்கழிவின் எடை, மக்கும் மற்றும் மக்காத குப்பையின் எடை, பஸ் நிலையங்களில் தினசரி சுத்தம் செய்யப்படும் நேரவிவரம் ஆகியவற்றை பதிவேட்டில் குறிப்பிட வேண்டும்.

பணியாளர்களுக்குரிய சம்பள தொகையை பிரதி மாதம், 5ந்தேதிக்குள் ஒப்பந்ததாரருக்கு நிர்வாகங்கள் வழங்க வேண்டும். பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட வேண்டிய பி.எப்., மற்றும் இ.எஸ்.ஐ., பங்கு தொகையை பிடித்தம் செய்து, ஒப்பந்ததாரரின் பங்குத் தொகையுடன் சேர்த்து உரிய கணக்கில் செலுத்தி ரசீது பெற்ற பின் அதனை சரிபார்த்த பிறகே அந்தந்த மாதத்திற்கான தொகையை ஒப்பந்ததாரருக்கு விடுவிக்க வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் ஒப்பந்ததாரர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அரசின் குறைந்தபட்ச கூலி சட்டம் 1948ன் படி வெளியிடப்பட்ட அரசாணை எண் 36ன் படி, குறைந்தபட்ச கூலி வழங்க வேண்டும்.

இவ்வாறு வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

# கற்றல் திறன் திறனறி தேர்வு: இன்று நடக்கிறது

திருப்பூர், நவ. 3

\3, 6 மற்றும் 9ம் வகுப்பு மாணவர்களின் கற்றல் திறனை அளவிடுவதற்காக, எஸ்இஏஎஸ் எனும் திறனறிவு தேர்வு பள்ளிக் கல்வித்துறை சார்பில் நாளை (3ந் தேதி) நடத்தப்படுகிறது.

மத்திய கல்வி அமைச்சகத்தால், பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை அளவிடுவதற்காக தேசிய சாதனை ஆய்வு தேர்வு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. கடந்த, 2022ல் தேர்வு நடந்த நிலையில், நடப்பாண்டுக்கான (2023) தேர்வு 3, 5, 8மற்றும்9ம் வகுப்பு மாணவர்களுக்கு நாளை (3ந் தேதி) நடத்தப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் நடக்கவுள்ள தேர்வுக்கான ஒருங்கிணைப்பாளராக முதன்மை கல்வி அலுவலர் கீதா, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் சங்கர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



தேர்வுநடத்திவிபரங்களை சேகரிக்க, வட்டார அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

# திட்டமிட்டபடி அதிமுகவில் இணைவது உறுதி திருச்சி சூர்யா சிவா தகவல்

சென்னை, நவ.3

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மையினர் அணி தலைவர் டெய்சி சரண் மற்றும் ஓ.பி.சி. அணியின் மாநில பொது செயலாளர் சூர்யா சிவா ஆகியோருக்கு இடையே நடந்த தொலைபேசி உரையாடல் ஒன்று பொதுவெளியில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது. தொலைபேசியில் ஆபாசமாக திட்டி திருச்சி சூர்யா சிவா பேசிய ஆடியோ வைரலானது.





இந்த விவகாரம் தொடர்பாக, டெய்சி சரண், சூர்யா சிவா ஆகியோரிடம் திருப்பூரில் வைத்து பா.ஜ.க. ஒழுங்குநடவடிக்கைகுழுவினர் தனித்தனியாக விசாரணை நடத்தினர்.

இதையடுத்து, சூர்யா சிவாவை கட்சி பொறுப்புகளில் இருந்து நீக்கி பாஜக அறிவித்தது.

இதை தொடர்ந்து, பாஜகவில் இருந்து நீக்கப்பட்ட சூர்யா சிவாவிற்கு கட்சியில் மீண்டும் பதவி வழங்க உள்ளதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்தார்.

மேலும், தான் வகித்து வந்த பதவியில் மீண்டும் தொடரவும் திருச்சி சூர்யா சிவாவுக்கு அண்ணாமலை அறிவுறுத்தினார்.

இந்நிலையில், இதுதொடர்பாக திருச்சி சூர்யா சிவா தன் முடிவை அறிவித்துள்ளார்.

இதுகுறித்து திருச்சி சிவா கூறுகையில், "திட்டமிட்டபடி எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து அதிமுகவில் என்னை இணைத்து கொள்கிறேன். அதிமுகவில் இணைவது உறுதி" என்றார்.

# சென்னையில் வேக வரம்பை மீறி செல்லும் வாகனங்களுக்கு அபராதம் அறிவிப்பு

சென்னை, நவ. 3

சென்னையில், சாலை பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வாகனங்களுக்கான வேக வரம்பை நிர்ணயித்து போக்குவரத்து காவல்துறை நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி, சென்னையில் இலகு ரக வாகனங்கள் அதிகபட்சமாக 60 கி.மீ வரை செல்லலாம் என்றும், இருசக்கர வாகனங்களின் அதிகபட்ச வேகம் 50 கி.மீ., ஆட்டோக்கள் அதிகபட்சம் 40 கி.மீ., வேகம் வரை செல்லலாம் என்றும் குடியிருப்பு பகுதிகளில் அனைத்து வாகனங்களும் அதிகபட்சம் 30 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டும் என்றும் சென்னையில் கனரக வாகனங்கள் அதிகபட்சமாக 50 கி.மீ வேகத்தில் செல்லலாம் என்றும் போக்குவரத்து காவல் துறை சார்பில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், சென்னையில் வேக வரம்பை மீறி செல்லும் வாகனங்களுக்கு அபராதம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வேக வரம்பை மீறி செல்லும் இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட இலகுரக வாகனங்களுக்கு ரூ.1000 அபராதம் அறிவிக்கப்பட்டுள்ளது. கனரக வாகனங்கள் வேக வரம்பை மீறினால் ரூ.2000 அபராதம் விதிக்கப்படுகிறது.



வேக வரம்பை மீறி செயல்படும் வாகன ஓட்டிகளுக்கு ஏ.என்.பி.ஆர் கேமரா மூலம் அபராதம் செலுத்தப்படும்.

வரும் 4ம் தேதி முதல் வாகனங்கள் வேக வரம்பு அமல் படுத்தப்படும் என சென்னை காவல்துறை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அந்தியூரில் மேட் தயாரிக்கும் பணி தீவிரம்

அந்தியூர், நவ. 3

ஈரோடு மாவட்டம் அந்தியூர்தவிட்டுப்பாளையம், வெள்ளியம்பாளையம், சின்னத்தம்பி பா ளையம், காட்டுப்பாளையம், சிந்த கவுண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மேட் (மிதியடி) தயாரிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. பெண்கள் தங்கள் வீடுகளில் இரவு. பகல் பாராமல் மேட் தயாரித்து ஈரோடு ஜவுளி மார்க்கெட்டில் திங்கட்கிழமைகளில் விற்பனைக்கு கொண்டு செல்வார்கள். மேலும் மொத்தமாக விற்பனை செய்யும் வியாபாரிகள் அந்தியூர் பகுதியில் வந்து வாங்கி வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

தற்போது மழைக்காலம் தொடங்க உள்ள நிலையில் இந்த மேட் தேவைகள் அதிகளவில் இருக்கும் என்பதால் திருப்பூரில் இருந்து வேஸ்டேஜ் துணிகளை டெம்போ மூலம் அந்தியூர் பகுதிகளுக்கு கொண்டு வந்து அவற்றை மேட் (கால் மிதியடியாக) பயன்படுத்த தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனால் வீட்டில் இருக்கும் பெண்களுக்கு வருமானத்தை பெருக்கும் வகையில் அமைந்திருப்பதால் அந்தியூர் சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவில் இதனை தயாரித்து கொடுக்கின்றார்கள். மேலும் சிறியரக மேட் 14 ரூபாயில் இருந்து 100 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்றாவாறு விற்பனை செய்து வருகின்றார்கள்.

# பாரதியார் பல்கலைக்கழக ஆராய்ச்சி படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

திருப்பூர், நவ. 3

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில், பி.எச்டி., ஆராய்ச்சி படிப்புக்கான, பகுதி நேரம், முழு நேர பிரிவின் கீழ், சேர்க்கை விண்ணப்பம் இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகிறது.

இணையதளம் வாயிலாக 15ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம். விண்ணப்பக் கட்டணமாக 1000 ரூபாய் (எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கு 500 ரூபாய்), இணையவழியாக செலுத்த வேண்டும்.பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வருகிற 15ந்தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எஸ்.சி., எஸ்.டி., பிரிவினர் சாதி சான்றிதழ்களையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

சேர்க்கை செயல்பாடுகள் ஜூன் 2023 பல்கலைக்கழக தரப்பில் நடத்தப்பட்ட பொது நுழைவுத்தேர்வு மதிப்பெண்கள், நேர்காணல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மேலும் விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தை காணலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


# மாநகராட்சி நகராட்சிகளில் தூய்மைப்பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி வழங்க வேண்டும் நகராட்சி நிர்வாக இயக்குனரகம் அறிவிப்பு


திருப்பூர், நவ. 3

காலாண்டுவரிஉயர்வை ரத்து செய்ய வேண்டும், ஆன்லைன் வழக்கு விதிப்பதை ரத்து செய்ய வேண்டும், அரசு மணல் குவாரிகளை உடனடியாக திறக்க வேண்டும் ஆகிய கோரிக்கையை வலியுறுத்தி வருகிற 9ந்தேதி, காலை 6மணி முதல் மாலை 6 மணி வரை ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய போவதாக மாநில லாரி உரிமையாளர் சம்மேளனம் அறிவித்துள்ளது. இந்த போராட்டத்தில் திருப்பூர் மாவட்ட லாரி உரிமையாளர் சங்கம் பங்கேற்கிறது. போராட்டத்துக்கு முன்னேற்பாடாக ரெயில் நிலைய கூட்ஸ்ஷெட், சபாபதிபுரம் பகுதியில் லாரிகளில் வேலை நிறுத்த நோட்டீஸ் ஒட்டப்பட்டது.ஓரிருநாளில்மாவட்ட லாரி உரிமையாளர் சங்க நிர்வாகிகள் கூடி போராட்டத்தில் பங்கேற்பது, லாரிகளை நிறுத்துவது குறித்து ஆலோசித்து அறிவிப்பு வெளியிட உள்ளனர்.

# 9ந்தேதி வேலைநிறுத்தம் திருப்பூர் மாவட்ட லாரி உரிமையாளர்கள் பங்கேற்க முடிவு


திருப்பூர், நவ. 3

காலாண்டுவரிஉயர்வை ரத்து செய்ய வேண்டும், ஆன்லைன் வழக்கு விதிப்பதை ரத்து செய்ய வேண்டும், அரசு மணல் குவாரிகளை உடனடியாக திறக்க வேண்டும் ஆகிய கோரிக்கையை வலியுறுத்தி வருகிற 9ந்தேதி, காலை 6மணி முதல் மாலை 6 மணி வரை ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய போவதாக மாநில லாரி உரிமையாளர் சம்மேளனம் அறிவித்துள்ளது. இந்த போராட்டத்தில் திருப்பூர் மாவட்ட லாரி உரிமையாளர் சங்கம் பங்கேற்கிறது. போராட்டத்துக்கு முன்னேற்பாடாக ரெயில் நிலைய கூட்ஸ்ஷெட், சபாபதிபுரம் பகுதியில் லாரிகளில் வேலை நிறுத்த நோட்டீஸ் ஒட்டப்பட்டது.ஓரிருநாளில்மாவட்ட லாரி உரிமையாளர் சங்க நிர்வாகிகள் கூடி போராட்டத்தில் பங்கேற்பது, லாரிகளை நிறுத்துவது குறித்து ஆலோசித்து அறிவிப்பு வெளியிட உள்ளனர்.


# கன்னியாகுமரி, எர்ணாகுளம் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் கூடுதலாக ஒரு ரெயில் நிலையத்தில் நின்று செல்ல ஒப்புதல்

திருப்பூர், நவ.3

பயணிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப எக்ஸ்பிரஸ், சூப்பர்பாஸ்ட் ரெயில்கள் நின்று செல்லும் நிலையங்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அவ்வகையில் கன்னியாகுமரி புனே எக்ஸ்பிரஸ் (எண்:16382) ஆந்திர மாநிலம் கொடுரு கடப்பா இடையே, ரஜாம்பெட் நிலையத்தில் நின்று செல்லும். எர்ணாகுளம் டாடா நகர் எக்ஸ்பிரஸ் (எண்:18190) ஜார்கண்ட் மாநிலம் சக்ரதர்புர் சினி நிலையங்களுக்கு இடையே, ராஜ்கஹரர்சன் நிலையத்தில் நின்று செல்லும். இதற்கு ரெயில்வே ஒப்புதல் வழங்கியுள்ளது.மறு அறிவிப்பு வரும் வரை இந்நடைமுறை தொடரும் என சேலம் கோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# கொப்பரை கொள்முதலில் புதிதாக விவசாயிகள் பதிவு செய்யலாம்



உடுமலை, நவ.3

சுல்தான்பேட்டை ஒன்றியம் செஞ்சேரிமலையடிபாளையத்தில் அரசு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் உள்ளது. இங்கு கடந்த செப்டம்பர் 30ந் தேதி வரை விவசாயிகளிடமிருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது. சாதாரண கொப்பரை கிலோ ரூ.108.60க்கும், பந்து கொப்பரைகிலோ ரூ.117. 50க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. கொள்முதல் இலக்கு அளவான 3 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் நிறைவு பெற்றவுடன் கொள்முதல் நிறுத்தம் செய்யப்பட்டது. இந்தநிலையில், அரசு உத்தரவின் பேரில் வருகிற 26ந் தேதி வரை கொள்முதல் காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வெளிமார்க்கெட்டில் கொப்பரை கொள்முதல் விலை மிகவும் குறைவாக உள்ளதால் பதிவு செய்யப்படாத விவசாயிகளிடம் இருந்தும் அரசு கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இந்த நிலையில், நேற்று கலெக்டர் அறிவுறுத்தல் படி தற்போது நடைபெற்று வரும் கொப்பரை கொள்முதலில் பதிவு செய்யாத விவசாயிகளும் புதிதாக பதிவு செய்து பயன்பெறலாம் என ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளர் தமிழரசன் தெரிவித்தார்.

# பி.ஏ.பி. வாய்க்காலில் தண்ணீர் திருடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் சென்னை ஐகோர்ட்டு உத்தரவு

காங்கயம், நவ.3

திருமூர்த்தி அணையில் இருந்து வெள்ளகோவில் வரை 126 கிலோ மீட்டர் நீளம் பி.ஏ.பி. கால்வாய் செல்கிறது. இந்த கால்வாயில் தண்ணீர் திறந்து விடும்போது முறைகேடாக தண்ணீர் திருட்டு நடைபெற்று வருகிறது. நாள் ஒன்றுக்கு 22 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 100 லாரி அளவு தண்ணீர் திருடப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் திருட்டின் மதிப்பை கணக்கிடுகையில் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.1 கோடி வரை நடந்திருக்கலாம். கால்வாயின் மொத்த தூரமான 126 கிலோமீட்டருக்கும் கணக்கிட்டால் பல கோடி ரூபாய் வரை தண்ணீர் திருட்டு நடந்திருக்க கூடும் என காங்கயம் வெள்ளகோவில் பி.ஏ.பி. நீர் பாசன சங்க தலைவர் பி.வேலுசாமி குற்றம் சாட்டியுள்ளார்.



மேலும் நீர் பாசன சங்கத்தின் மூலம் போடப்பட்ட விதிமுறைகளை தாண்டி பல அடி ஆழத்திற்கு குழாய்கள் அமைத்தும், அதிக திறன் கொண்ட மோட்டார்கள் வைத்தும் கால்வாயில் பாயும் நீரை திருடுகின்றனர்.

முறைகேடாக வாய்க்காலில் இருந்து 50 மீட்டர் தூரத்திற்குள் கிணறுகள் வெட்டி பாசனநீரை இரண்டுக்கு ஒரு சுற்று என்ற வீதம் நீர் திருடப்பட்டு வருகிறது எனவும் குற்றம் சாட்டினார்.

இது போன்று பல இடங்களில் பல விதமாக தண்ணீர் திருடுவதன் மூலம் கடைமடை விவசாயிகள் தண்ணீரை அனுபவிக்கும் சட்டப்பூர்வ உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீர் பாசன அதிகாரிகள், காவல்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் மின்சாரத் துறை ஆகியோர் சேர்ந்து தண்ணீர் திருட்டை தடுத்து முறையான பாசன நீர் வினியோகம் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என கோர்ட்டில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த கோர்ட்டு பி.ஏ.பி. வாய்க்காலில் தண்ணீர் திருட்டை தடுத்து சமச்சீராக நீர் வழங்கிட நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தது. மேலும் காவல்துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் (நீர்வளத்துறை) காங்கயம் வெள்ளகோவில் பி.ஏ.பி. பாசன விவசாயிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு சட்டத்திற்குப் புறம்பாக பி.ஏ.பி. கால்வாயில்

தண்ணீர் திருடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் எனவும் சென்னை ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.



## கமலுக்காக களமிறங்கிய திரைப்பிரபலங்கள்



இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் தற்போது இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்துள்ளார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது. இதையடுத்து 'இந்தியன் 2' படத்தின் அறிமுக வீடியோவை தமிழில் நடிகர் ரஜினிகாந்த் நாளை மாலை 5.30 மணிக்கு வெளியிடவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'இந்தியன் 2' படத்தின் தெலுங்கு வீடியோவை இயக்குனர்ராஜமவுலியும்,இந்தியில்நடிகர்அமீர்கானும், கன்னடத்தில் கிச்சா சுதீப்பும், மலையாளத்தில் மோகன் லாலும் வெளியிடவுள்ளனர். இதனை படக்குழு போஸ்டர்களை பகிர்ந்து அறிவித்துள்ளது.



## ஜூனியர் பாலையா மரணம் கமல்ஹாசன் இரங்கல்

எம்.ஜி.ஆர்., சிவாஜி உள்ளிட்டோரோடு நடித்த பழம்பெரும் நடிகர் டி.எஸ்.பாலையா. தனது கணீர் குரலாலும் நடிப்புத் திறமையாலும் மக்கள் மத்தியில் புகழ்பெற்ற இவரது மகன் ஜூனியர் பாலையா. 70 வயதான இவர் 1975ம் ஆண்டு வெளியான மேல் நாட்டு மருமகள் என்கிற படத்தின் மூலமாக தமிழ் திரையுலகில் அறிமுகமானார். இதன் பிறகு சினிமா, தொலைக்காட்சி தொடர்களில் நடித்து புகழ்பெற்ற ஜூனியர் பாலையா வயது மூப்பு காரணமாக இன்று காலையில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் அடைந்தார். சென்னை வளசரவாக்கத்தில் குடும்பத்தினருடன் வசித்து வந்த ஜூனியர் பாலையா கடந்த சில மாதங்களாகவே வயது மூப்பு காரணமாக வெளியில் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார். இதையடுத்து இன்று அவரது உயிர் பிரிந்துள்ளது. கோபுரவாசலிலே, கரகாட்டக்காரன், சின்னத்தம்பி, சாட்டை, நேர்கொண்ட பார்வை உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்து மக்கள் மத்தியில் பிரபலமான ஜூனியர் பாலையா சித்தி, சின்னபாப்பா பெரிய பாப்பா உள்ளிட்ட பல்வேறு தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்துள்ளார். சாட்டை திரைப்படத்தில் தலைமை ஆசிரியர் வேடத்தில் தனித்துவமான நடிப்பை வெளிப்படுத்தி இருப்பார். கும்கி, தனி ஒருவன், புலி உள்ளிட்ட படங்களிலும் இவரது நடிப்பு பாராட்டை பெற்றிருந்தது. ஜூனியர் பாலையாவின் இயற்பெயர் ரகுபாலையா. இவரது தந்தை டி.எஸ்.பாலையாவின் சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளம் அருகே உள்ள சுண்டன்கோட்டை ஆகும். டி.எஸ்.பாலையா சினிமாவில் கொடிகட்டி பறந்து சென்னையிலேயே குடியேறிவிட்டதால் ஜூனியர் பாலையா சென்னையிலேயே பிறந்து வளர்ந்தார். தந்தையை போன்றே இவருக்கும் 'கணீர்' குரல்தான். உருவ தோற்றமும் கிட்டத்தட்ட ஒன்று போலவே இருக்கும். 50 ஆண்டுகளாக திரைப்படங்களில் நடித்து வந்த ஜூனியர் பாலையா, 287 படங்களில் நடித்திருக்கிறார். இவரது மனைவி பார்வதி, மகள் நிவேதிதா, மகன் ரோகித் பாலையா. இவரும் சினிமாவில் நடித்து வருகிறார். ஜூனியர் பாலையா கடைசியாக நடித்த படம் 'என்னங்கடா உங்க சட்டம்'. ஜூனியர் பாலையாவின் உடலுக்குதிரையுலகபிரபலங்கள்நேரில்சென்றுஅஞ்சலிசெலுத்திஅவரதுகுடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி வருகிறார்கள். இந்நிலையில், நடிகர் கமல்ஹாசன் இரங்கல் தெரிவித்து பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "பழம்பெரும் நடிகர் டி.எஸ்.பாலையா அவர்களின் மகனான ஜூனியர் பாலையா ரகு, எனக்கு பதின்பருவ நண்பராக அமைந்தார். தந்தையைப் போலவே நாடக மேடைகளில் தன் கலையைத் தொடங்கி திரையில் வலம் வந்தவர் இன்று மறைந்து விட்டார். அவருக்கு என் அஞ்சலி. அவரது குடும்பத்தாருக்கு என் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்"என்றுகுறிப்பிட்டுள்ளார்.பழம்பெரும்நடிகர்டி.எஸ்.பாலையா அவர்களின் மகனான ஜூனியர் பாலையா ரகு, எனக்கு பதின்பருவ நண்பராக அமைந்தார். தந்தையைப் போலவே நாடக மேடைகளில் தன் கலையைத் தொடங்கி திரையில் வலம் வந்தவர் இன்று மறைந்து விட்டார். அவருக்கு என் அஞ்சலி. அவரது குடும்பத்தாருக்கு என் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## சினிமா எடுக்கும்போது பயங்கர சுயநலவாதி நான் பா.இரஞ்சித் ஓபன் டாக்



இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 'தங்கலான்' திரைப்படம் ஜனவரி 26ஆம் தேதி வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் டீசர் நேற்று வெளியானது.

'தங்கலான்' டீசர் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட இயக்குனர் பா.இரஞ்சித் பேசியதாவது, விக்ரம் சாரை எனக்கு ரொம்ப பிடிக்கும். கலை நயமான நடிகர். பொதுவாக கதாபாத்திரங்கள் இப்படி தான் இருக்க வேண்டும் என்று வரைந்து கொடுப்போம். அப்படி செய்து சில புகைப்படக்களை எல்லாம் தான் விக்ரமிடம் எடுத்து கொடுத்தேன். ஸ்பாட்டில் அவர் அந்த மாதிரியான ஆளாக மாறி வந்துவிட்டார். ஒவ்வொரு படத்திற்கும் ஏன் இவ்வளவு மெனக்கெடுறீங்கன்னு நான் விக்ரமிடம் கேட்டேன். ஏன்னா விக்ரமிற்கு படப்பிடிப்பின் போது விலா எலும்பில் காயம் ஏற்பட்டது. அப்போது அவர் எனக்கு ஒரு சண்டை காட்சி செய்து தர வேண்டும். நான் சினிமா எடுக்கும் போது பயங்கர சுயநலவாதி, ஆனால் சினிமா எடுக்கும்போது ரொம்ப கூலாக காட்டிக் கொள்வேன். யாரையும் கஷ்டப்படுத்தாம வேலை வாங்க வேண்டும் என்று முயற்சி செய்வேன். ஒருநாள் காலையில் ஆரம்பித்து நான்கு மணிவரை நடித்துக் கொடுத்துக் கொண்டே இருந்தார். ஒரு கதாபாத்திரத்தை உண்மையாக காட்டுவதற்கு ஒரு நடிகர் இவ்வளவு மெனக்கெட வேண்டும் என்றால் அந்த கதாபாத்திரத்தை அந்த நடிகர் எவ்வளவு நம்பி இருப்பார். அந்த நம்பிக்கை எனக்கு ஒரு பெரிய நம்பிக்கையை கொடுத்தது. அதனால் தான் தங்கலான் முழுமையடைந்துள்ளது. அவரிடம் இருந்த கமிட்மெண்டை பார்த்துவிட்டு எனக்கு பயம் வந்துவிட்டது. அதுதான் இன்னும் இந்த படத்தில் நல்ல வேலை செய்ய உதவியது என்று பேசினார்.

## கேப்டன் மில்லர் திரைப்படத்தின் டப்பிங் பணியை தொடங்கிய பிரியங்கா மோகன்

இயக்குனர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் தனுஷ் 'கேப்டன் மில்லர்' படத்தில் நடித்துள்ளார். வரலாற்று பாணியில் உருவாகியுள்ள இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இதில் பிரியங்கா அருள் மோகன், நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கன், சுமேஷ் மூர் மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

'கேப்டன் மில்லர்' திரைப்படத்தின் டீசர் மற்றும் பாடல் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் டப்பிங் பணியில் நடிகை பிரியங்கா மோகன் ஈடுபட்டுள்ளார். இதனை அவர் தனது சமூக வலைதளத்தில் புகைப்படத்தை பகிர்ந்து தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது பாடலை வெளியிட்ட ரெய்டு




'டாணாக்காரன்' மற்றும் சமீபத்தில் வெளியான 'இறுகப்பற்று' போன்ற படங்களில் தனது அற்புதமானநடிப்பின்மூலம் ரசிகர்களின் இதயங்களை வென்றவர் விக்ரம் பிரபு. இவர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'ரெய்டு'. ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகியுள்ள 'ரெய்டு' திரைப்படத்தை கார்த்தி இயக்கியுள்ளார். இந்த படத்தில் ஸ்ரீதிவ்யா கதாநாயகியாக நடித்துள்ளார்.

மேலும், அனந்திகா, ரிஷி ரித்விக், சௌந்தரராஜா மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். எஸ்.கே. கனிஷ்க் மற்றும் ஜிகே ஆகியோர் தயாரித்துள்ள இந்த படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைத்துள்ளார். இப்படத்திற்கு இயக்குநர் முத்தையா வசனம் எழுத கதிரவன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில், 'ரெய்டு' படத்தில் இடம்பெற்றுள்ள இரண்டாவது பாடலான 'அழகு செல்லம்' பாடலின்லிரிக்வீடியோவெளியாகியுள்ளது.காதல்பாணியில்உருவாகியுள்ள இந்த பாடலை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கி வருகின்றனர். 'ரெய்டு' திரைப்படம் 10ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஷாருக்கான் பிறந்தநாள்.. ரசிகர்களுக்கு சர்ப்ரைஸ் கொடுத்த ஓடிடி தளம்



இயக்குனர் அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் செப்டம்பர் 7ஆம் தேதி திரையரங்குகளில் வெளியான திரைப்படம் 'ஜவான்'. பான் இந்தியா படமாக வெளியான இப்படத்தில் நயன்தாரா, தீபிகா படுகோனே, விஜய் சேதுபதி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து அசத்தியுள்ளனர். இப்படம் விமர்சன ரீதியாக கலவையான விமர்சனங்களை பெற்றாலும் ரூ.1000 கோடிக்கு மேல் வசூலை குவித்து பாக்ஸ் ஆபீஸில் அதிரடி காட்டியது.

இந்நிலையில், 'ஜவான்' திரைப்படம் ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது. அதாவது, நடிகர் ஷாருக்கான் இன்று தனது பிறந்த நாளை கொண்டாடுகிறார். இதைத்தொடர்ந்து ரசிகர்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கும் விதமாக நெட்பிளிக்ஸ் ஓடிடி தளம் 'ஜவான்' படத்தை Extended Cutவுடன் வெளியிட்டுள்ளது. இதனை ரசிகர்கள் உற்சாகத்துடன் பார்த்து வருகின்றனர்.

## இந்தியன் வீடியோவை வெளியிடும் எந்திரன்.. உற்சாகத்தில் ரசிகர்கள்



இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் தற்போது இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்துள்ளார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், 'இந்தியன் 2' படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் அறிமுக வீடியோவை நாளை மாலை 5.30 மணிக்கு ரஜினிகாந்த் வெளியிடவுள்ளார். இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.

இந்த போஸ்டரை சமூக வலைதளத்தில் ட்ரெண்டாக்கும் ரசிகர்கள் 'இந்தியன் வீடியோவை எந்திரன் வெளியிடுகிறார்' என கமெண்ட் செய்து வருகின்றனர்.


## உலக கோப்பை 2023 விராட் கோலி, சுப்மன் கில் அரை சதம் அடித்து அசத்தல்



உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரின் 33வது லீக் போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. பேட்டிங்கில் இந்தியஅணிக்குதுவக்கத்திலேயேஅதிர்ச்சிகாத்திருந்தது. இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மா வெறும் 4 ரன்கள் எடுத்த நிலையில் பெவிலியன் திரும்பினார்.

இவருடன் களமிறங்கிய சுப்மன் கில் சிறப்பாக விளையாடி 92 ரன்களை குவித்தார். அடுத்து களமிறங்கிய விராட் கோலி 88 ரன்களில் ஆட்டமிழந்தார். இவருடன் ஆடிய ஸ்ரேயஸ் அய்யர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் 82 ரன்களை எடுத்த போது அவுட் ஆனார். கே.எல்.ராகுல் 21 ரன்களில் ஆட்டமிழக்க, சூர்யகுமார்யாதவ் 12 ரன்களில் பெவிலியன் திரும்பினார். போட்டி முடிவில் இந்திய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 357 ரன்களை குவித்தது. இலங்கை சார்பில் தில்ஷான் மதுஷங்கா 5 விக்கெட்டுகளையும், துஷமந்தா சமீரா 1 விக்கெட் வீழ்த்தினர்.

## சாதனை படைத்த லியோனல் மெஸ்சி: சிப்ஸ் பாக்கெட்டில் புகைப்படம் அச்சிட்ட லேஸ் நிறுவனம்



உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. மகாராஷ்டிராவின் வான்கடே மைதானத்தில் உலக கோப்பை தொடரின் 33வது லீக் ஆட்டத்தில் இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன. டாஸ் வென்ற இலங்கை பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, இந்திய அணி முதலில் களமிறங்கியது. முதல் ஓவரில் கேப்டன் ரோகித் சர்மா 4 ரன்னில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார்.



அடுத்து இறங்கிய விராட் கோலி, சுப்மன் கில்லுடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக ஆடியது. இருவரும் அரை சதமடித்து அசத்தினர்.

இந்திய அணி 22 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 132 ரன்கள் எடுத்துள்ளது.

## உலகக் கோப்பையில் சூப்பர் செய்கை.. அரையிறுதிக்கு முன்னேறிய முதல் அணி.. இந்தியா அபாரம்



உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி துவக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. அந்த வரிசையில், இன்று இலங்கை அணியை எதிர்கொண்டு விளையாடிய இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்தியஅணிசார்பில்முகமதுசமிஐந்துவிக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். இதன் மூலம் உலகக் கோப்பை தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை முகமது சமி பெற்று இருக்கிறார். இவருக்கு அடுத்த இடத்தில் ஜாகீர் கான், ஸ்ரீநாத் ஆகியோர் தலா 44 விக்கெட்டுகளை வீழ்த்தி, இரண்டு மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.

அந்த வகையில், இதுவரை விளையாடிய ஏழு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்று இருக்கிறது. இதன் மூலம் நடப்பு உலகக் கோப்பை தொடரின் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறிய முதல் அணி என்ற பெருமையை இந்தியா பெற்று இருக்கிறது.

## சமி, சிராஜ்இன் தரமான சம்பவம்.. இலங்கையை 302 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது இந்தியா

உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரின் 33வது லீக் போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. பேட்டிங்கில் இந்திய அணிக்கு துவக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மா வெறும் 4 ரன்கள் எடுத்த நிலையில் பெவிலியன் திரும்பினார்.

இவருடன் களமிறங்கிய சுப்மன் கில் சிறப்பாக விளையாடி 92 ரன்களை குவித்தார். அடுத்து களமிறங்கிய விராட் கோலி88ரன்களில்ஆட்டமிழந்தார்.இவருடன்ஆடியஸ்ரேயஸ்அய்யர்சிறப்பானஆட்டத்தைவெளிப்படுத்தினார். இவர் 82 ரன்களை எடுத்த போது அவுட் ஆனார்.

கே.எல். ராகுல் 21 ரன்களில் ஆட்டமிழக்க, சூர்யகுமார் யாதவ் 12 ரன்களில் பெவிலியன் திரும்பினார். போட்டி முடிவில் இந்திய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 357 ரன்களை குவித்தது. இலங்கை சார்பில் தில்ஷான் மதுஷங்கா 5 விக்கெட்டுகளையும், துஷமந்தா சமீரா 1 விக்கெட் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே பேரதிர்ச்சி காத்திருந்தது. இந்திய வீரர் பும்ரா வீசிய முதல் பந்திலேயே விக்கெட் வீழ்த்தினார். இதே போன்று சிராஜ் வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே விக்கெட் எடுத்தார். தொடர்ந்து சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்திய இந்திய வீரர்களால் இலங்கை அணி 3 ரன்களில் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இலங்கை அணி வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ரன்களில் பெவிலியன் திரும்பினர். அந்த அணியின் ஏஞ்சலோ மேத்யூஸ் மட்டும் பொறுமையாக ஆடினார். இவரும் 12 ரன்களில் அவுட் ஆனார். இதன் மூலம் இந்திய அணி 19.4 ஓவர்களில் வெறும் 55 ரன்களை விட்டுக் கொடுத்து இலங்கை அணியின் அனைத்து விக்கெட்டுகளையும் கைப்பற்றியது. போட்டி முடிவில் இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்தியா சார்பில் முகமது சமி 5 விக்கெட்டுகளையும், முகமது சிராஜ் 3 விக்கெட்டுகளையும், பும்ரா மற்றும் ஜடேஜா தலா 1 விக்கெட் வீழ்த்தினர். நடப்பு உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி இதுவரை விளையாடிய ஏழு போட்டிகளிலும் வெற்றி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.